முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**OS No. 844/2019**

**Witness PW 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | சாதி | |
| க/பெ | ஸ்ரீகாந்த் | மதம் | |
| ஊர் | | தொழில் | |
| மாவட்டம் | | வயது | |
| | | தேதி | 07.07.2022 |

இன்று (07.07.2022) 1872 ம் ஆண்டுசட்டம் 10ன்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கி கொடுக்கவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் மொத்தம் நான்கு லட்சம் கடன் வாங்கினார். முதலில் ரூ.2,00,000/-மும் பின்பு ரூ-2,00,000/-மும் வாங்கினார். பிரதிவாதி எனக்கு ஏற்கனவே பழக்கம் ஆனவர். அவராக வந்து என்னிடம் கடன் கேட்டார். எவ்வாறு பழக்கம் என்று என்னால் சொல்லமுடியவில்லை. வியாபாரத்திற்காக பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார். ஆறு மாதத்தில் திருப்பி கொடுப்பதாக சொல்லி கடன் வாங்கினார். ஏற்கனவே வாங்கிய ரூ.2,00,000/-த்தையும் ஆறு மாதத்தில் கொடுப்பதாகதான் வாங்கினார். ஏற்கனவே என்னிடம் கடன் வாங்கியிருந்தும் மீண்டும் அவருக்கு கடன் கொடுப்பதற்கு காரணம் அவர்மீது இருந்த நம்பிக்கைதான். நான் பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் அவர் திருப்பி கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்தேன். 2014 ஜனவரி மாதத்தில் நான் கொடுத்த கடனை ஜுலை 2014 முதல் பிரதிவாதியிடம் நான் கேட்டு வந்தேன். பிரதிவாதி பலமுறை பணத்தை கொடுத்துவிடுவதாக கூறிவருவதால் நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. 2018ம் வருடத்தில் ஜுலை மாதம் 30ம் தேதி அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் பிரதிவாதி இரண்டு தவணையாக வாங்கிய கடனுக்கு ஒரே அறிவிப்புதான் கொடுத்தேன். நான் பிரதிவாதியிடம் கடன் கொடுத்த போது யார் இருந்தார்கள் என்று கேட்டால் யாரும் இல்லை. வட்டியாக மாதம் ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் தருவதாக ஒப்புக்கொண்டார். ரூ.1000/- மட்டும்தான் எதிரி எனக்கு

கொடுத்தார். புரோநோட் பச்சை காகிதத்தில் பிரதிவாதியால் கைப்படை எழுதப்பட்டு வருவாய் வில்லை ஒட்டப்பட்டு அதில் கையொப்பம் செய்யப்பட்டது. இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட புரோநோட்டு அச்சிடப்பட்ட புரோநோட் ஆகும். நான் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் சாட்சியை வைத்துக்கொண்டு கொடுத்திருப்பேன் என்றும் நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புரோநோட்டில் பிரதிவாதி கைரேகை வைக்கவில்லை கையொப்பம் மட்டும்தான் போட்டார். வேறு அடையாள ஆவணம் எதுவும் பிரதிவாதியிடம் வாங்கவில்லை. பிரதிவாதி வேறு ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும். புரோநோட்டை நான் எழுதவில்லை. நான் எழுதியதாக சொன்னால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் பிரதிவாதியே எழுதியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கதிர்வேல் என்பவர் எனது வீடு இருக்கும் தெருவில் இருந்து அடுத்த தெருவில் இருக்கின்றார். அவரை எனக்கு தெரிந்தவர் என்று சொல்லமுடியாது. கதிர்வேல் என்பவர் மீது நான் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவர் என்னிடம் கடன் வாங்கியிருந்தார். அந்த வழக்கு எனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டு கதிர்வேல் என்பவர் பணம் கொடுக்கமுடியவில்லை என்பதால் நிறைவேற்று மனுவில் அவர் சிவில் சிறைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். பிரதிவாதி கதிர்வேல் என்பவருக்கு வேண்டப்பட்ட நபர் என்பதாலும் அவருக்கு கதிர்வேல் மீது தாக்கல் செய்த வழக்கில் உறுதுணையாக இருந்ததாலும் நான் பிரதிவாதியின் மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் காசோலை எதுவும் வாங்கவில்லை. நான் உண்மையாக கடன் கொடுத்திருந்தால் அதற்கு உரிய ஆவணங்கள் வாங்கியிருப்பேன் என்றும் இந்த வழக்கு பொய்யாக தாக்கல்செய்யப்பட்ட வழக்கு என்றும் அதனால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.
S/d- N.S.Jayaprakash,
I Additional Subordinate Judge,
Villupuram